ஶ்ரீ:
ஶ்ரீமதே இராமாநுஜாய நம:



## மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் அருளிச் செய்த தமிழ் வேதமாகிய நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

## குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த

# பெருமாள் திருமொழி




**Second Edition: 2011**
First edition: 2005

Copyright © 2001-2011
All Rights Reserved

## பெருமாள் திருமொழி


பெருமாள் திருமொழி ........ 3
தனியன்கள் ........ 3
1 - இருளிரியச் சுடர்மணிகள் ........ 3
2 - தேட்டறும் ........ 6
3 - மெய்யில் வாழ்க்கையை ........ 8
4 - ஊனேறு ........ 9
5 - தருதுயரம் ........ 11
6 - ஏர்மலர் ........ 13
7 - ஆலைநீள் கரும்பு ........ 15
8 - மன்னுபுகழ் ........ 17
9 - வன்தாளினிணை ........ 20
10 - அங்கணெடு மதிள் ........ 23

## குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
# பெருமாள் திருமொழி

---

### பெருமாள் திருமொழி தனியன்கள்

### உடையவர் அருளிச் செய்தது[1]

இன்னமுதம் ஊட்டுகேன் இங்கே வா பைங்கிளியே! *
தென்னரங்கம் பாட வல்ல சீர்ப் பெருமாள் * - பொன்னஞ்
சிலை சேர் நுதலியர் வேள் சேரலர் கோன் * எங்கள்
குலசேகரன் என்றே கூறு

### மணக்கால் நம்பி அருளிச் செய்தது

ஆரம் கெடப் பரன் அன்பர் கொள்ளார் என்று * அவர்களுக்கே
வாரங்கொடு குடப் பாம்பிற் கை இட்டவன் * மாற்றலரை
வீரங்கெடுத்த செங்கோல் கொல்லி காவலன் வில்லவர் கோன் *
சேரன் குலசேகரன் முடி வேந்தர் சிகாமணியே

---

## குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
## பெருமாள் திருமொழி 1 - இருளிரியச் சுடர்மணிகள்
### (திருவரங்கனைக் கண்டு களிக்க ஆசைப்படுதல்)

647 * இருள் இரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி *
இனத்துத்தி அணிபணம் ஆயிரங்கள் ஆர்ந்த *
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும் *
அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை மேவி **
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி *
திரைக் கையால் அடி வருடப் பள்ளி கொள்ளும் *
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு * என்
கண்ணிணைகள் என்று கொலோ களிக்கும் நாளே? 1

648 * வாயோர் ஈரைஞ்னூறு துதங்கள் ஆர்ந்த *
வளை உடம்பின் அழல் நாகம் உமிழ்ந்த செந்தீ *
வீயாத மலர்ச் சென்னி விதானமே போல் *
மேன்மேலும் மிக எங்கும் பரந்ததன் கீழ் **
காயாம்பூ மலர்ப் பிறங்கல் அன்ன மாலைக் *
கடி அரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும் *

[1] மணக்கால் நம்பி அருளிச் செய்ததாகவும் கூறுவர்

மாயோனை மணத்தூணே பற்றி நின்று * என்
வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே? 2

649 எம்மாண்பின் அயன் நான்கு நாவினாலும்
எடுத்தேத்தி * ஈரிரண்டு முகமும் கொண்டு *
எம்மாடும் எழிற்கண்கள் எட்டினோடும்
தொழுதேத்தி * இனிதிறைஞ்ச நின்ற செம்பொன் **
அம்மான் தன் மலர்க் கமலக் கொப்பூழ் தோன்ற *
அணி அரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும் *
அம்மான் தன் அடியிணைக் கீழ் அலர்கள் இட்டு * அங்கு
அடியவரோடு என்று கொலோ அணுகும் நாளே? 3

650 மாவினை வாய் பிளந்து உகந்த மாலை * வேலை
வண்ணணை என் கண்ணணை வன் குன்றம் ஏந்தி *
ஆவினை அன்று உய்யக் கொண்ட ஆயர் ஏற்றை *
அமரர்கள் தன் தலைவனை அந்தமிழின் இன்பப்
பாவினை ** அவ்வடமொழியைப் பற்றற்றார்கள் *
பயில் அரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும் *
கோவினை நாவுற வழுத்தி என்தன் கைகள் *
கொய்ம்மலர் தூய் என்று கொலோ கூப்பும் நாளே? 4

651 இணை இல்லா இன்னிசை யாழ் கெழுமி * இன்பத்
தும்புருவும் நாரதனும் இறைஞ்சி ஏத்த *
துணை இல்லாத் தொன்மறை நூல் தோத்திரத்தால் *
தொன்மலர்க்கண் அயன் வணங்கி ஓவாது ஏத்த **
மணிமாட மாளிகைகள் மல்கு செல்வ *
மதிள் அரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும் *
மணிவண்ணன் அம்மானைக் கண்டு கொண்டு * என்
மலர்ச் சென்னி என்று கொலோ வணங்கும் நாளே? 5

652 அளிமலர் மேல் அயன் அரன் இந்திரனோடு * ஏனை
அமரர்கள் தம் குழுவும் அரம்பையரும் மற்றும் *
தெளிமதி சேர் முனிவர்கள் தம் குழுவும் முந்தித் *
திசை திசையில் மலர் தூவிச் சென்று சேரும் **
களிமலர் சேர் பொழில் அரங்கத்து உரகம் ஏறிக் *
கண் வளரும் கடல் வண்ணர் கமலக் கண்ணும் *
ஒளிமதி சேர் திருமுகமும் கண்டு கொண்டு * என்
உள்ளம் மிக என்று கொலோ உருகும் நாளே? 6

653 மறம் திகழும் மனமொழித்து வஞ்சமாற்றி *
வன்புலன்கள்[2] அடக்கி இடர்ப்பாரத் துன்பம்

[2] ஐம்புலன்கள்

துறந்து * இருமுப்பொழுது ஏத்தி எல்லை இல்லாத்
தொன்னெறிக்கண் * நிலை நின்ற தொண்டரான **
அறம் திகழும் மனத்தவர் தம் கதியைப் பொன்னி *
அணி அரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும் *
நிறம் திகழும் மாயோனைக் கண்டு என் கண்கள் *
நீர்மல்க என்று கொலோ நிற்கும் நாளே? 7

654 கோலார்ந்த நெடும் சார்ங்கம் கூனற் சங்கம் *
கொலையாழி கொடுந்தண்டு கொற்ற வொள்வாள் *
காலார்ந்த கதிக் கருடன் என்னும் * வென்றிக்
கடும் பறவை இவை அனைத்தும் புறஞ்சூழ் காப்ப **
சேலார்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த *
திருவரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும் *
மாலோனைக் கண்டு இன்பக் கலவி எய்தி *
வல்வினையேன் என்று கொலோ வாழும் நாளே? 8

655 தூராத மனக் காதல் தொண்டர் தங்கள்
குழாம் குழுமித் * திருப்புகழ்கள் பலவும் பாடி *
ஆராத மனக் களிப்போடு அழுத கண்ணீர்
மழை சோர * நினைந்துருகி ஏத்தி ** நாளும்
சீரார்ந்த முழவோசை பரவை காட்டும் *
திருவரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும் *
போராழி அம்மானைக் கண்டு துள்ளிப் *
பூதலத்தில் என்று கொலோ புரளும் நாளே? 9

656 * வன்பெரு வானகம் உய்ய அமரர் உய்ய
மண்ணுய்ய * மண்ணுலகில் மனிசர் உய்ய *
துன்பமிகு துயர் அகல அயர்வொன்றில்லாச்
சுகம் வளர * அகமகிழும் தொண்டர் வாழ **
அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளி கொள்ளும் *
அணி அரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள் *
இன்பமிகு பெருங்குழுவு கண்டு * யானும்
இசைந்துடனே என்று கொலோ இருக்கும் நாளே? 10

657 * திடர் விளங்கு கரைப் பொன்னி நடுவு பாட்டுத் *
திருவரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும் *
கடல் விளங்கு கருமேனி அம்மான் தன்னைக் *
கண்ணாரக் கண்டுகக்கும் காதல் தன்னால் **
குடை விளங்கு விறல் தானைக் கொற்ற வொள்வாள் *
கூடலர் கோன் கொடைக் குலசேகரன் சொற் செய்த *
நடை விளங்கு தமிழ் மாலை பத்தும் வல்லார் *
நலம் திகழ் நாரணன் அடிக் கீழ் நண்ணுவாரே 11

**அடிவரவு:** இருள் வாய் எம்மாண்பின் மாவினை இணை அளி மறம் கோல்
தூராத வன்பெரு திடர் தேட்டு

---

### குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
## பெருமாள் திருமொழி 2 - தேட்டறும் திறல்
### (அரங்கன் மெய்யடியாரது அடிமைத் திறத்தில் ஈடுபடுதல்)

658 * தேட்டரும் திறல் தேனினைத் *
தென்னரங்கனை * திருமாது வாழ்
வாட்டமில் வனமாலை மார்வனை வாழ்த்தி *
மால்கொள் சிந்தையராய் **
ஆட்டமேவி அலந்தழைத்து * அயர்வெய்தும்
மெய்யடியார்கள் தம் *
ஈட்டம் கண்டிடக் கூடுமேல் * அது
காணும் கண் பயன் ஆவதே 1

659 தோடுலா மலர்மங்கை தோளிணை தோய்ந்ததும் *
சுடர் வாளியால் *
நீடு மாமரம் செற்றதும் நிரை மேய்த்ததும் *
இவையே நினைந்து **
ஆடிப்பாடி அரங்கவோ! என்றழைக்கும் *
தொண்டரடிப்பொடி
ஆட நாம் பெறில் * கங்கை நீர் குடைந்தாடும் *
வேட்கை என்னாவதே? 2

660 ஏறடர்த்ததும் ஏனமாய் நிலம் கீண்டதும் *
முன் இராமனாய் *
மாறடர்த்ததும் மண்ணளந்ததும் *
சொல்லிப் பாடி ** வண்பொன்னிப் பே
ராறு போல் வரும் கண்ணநீர் கொண்டு *
அரங்கன் கோயில் திருமுற்றம் *
சேறு செய் தொண்டர் சேவடிச் * செழுஞ்சேறு
என் சென்னிக்கு அணிவனே 3

661 தோய்த்த தண்தயிர் வெண்ணெய் பாலுடன்
உண்டலும் * உடன்றாய்ச்சி கண்டு *
ஆர்த்த தோளுடை எம்பிரான் * என்
அரங்கனுக்கு அடியார்களாய் **
நாத்தழும்பெழ நாரணா என்றழைத்து *
மெய் தழும்பத் தொழுது
ஏத்தி * இன்புறும் தொண்டர் சேவடி *

ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சமே 4

662 பொய்சிலைக் குரலேற்றெருத்தம்
இறுத்துப் * போரரவீர்த்த கோன் *
செய்சிலைச் சுடர் சூழொளித் * திண்ண
மாமதிள் தென்னரங்கனாம் **
மெய்சிலைக் கருமேகம் ஒன்று * தம்
நெஞ்சில்[3] நின்று திகழப் போய் *
மெய்சிலிர்ப்பவர் தம்மையே நினைந்து *
என் மனம் மெய் சிலிர்க்குமே 5

663 ஆதி அந்தம் அனந்தம் அற்புதமான *
வானவர் தம் பிரான் *
பாத மாமலர் சூடும் பத்தி இலாத *
பாவிகள் உய்ந்திட **
தீதில் நன்னெறி காட்டி * எங்கும்
திரிந்து அரங்கன் எம்மானுக்கே *
காதல் செய் தொண்டர்க்கு எப்பிறப்பிலும் *
காதல் செய்யும் என் நெஞ்சமே 6

664 காரினம் புரை மேனி நற்கதிர் *
முத்த வெண்ணகைச் செய்ய வாய் *
ஆரமார்வன் அரங்கன் என்னும் *
அரும்பெரும் சுடர் ஒன்றினை **
சேரும் நெஞ்சினராகிச் * சேர்ந்து
கசிந்திழிந்த கண்ணீர்களால் *
வார நிற்பவர் தாளிணைக்கு *
ஒரு வாரமாகும் என் நெஞ்சமே 7

665 மாலையுற்ற கடல் கிடந்தவன் *
வண்டுகிண்டு நறுந்துழாய் *
மாலையுற்ற வரைப்பெரும் திருமார்வனை *
மலர்க்கண்ணனை **
மாலையுற்று எழுந்து ஆடிப்பாடித் *
திரிந்து அரங்கன் எம்மானுக்கே *
மாலையுற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு *
மாலையுற்றது என் நெஞ்சமே 8

666 மொய்த்துக் கண்பனி சோர மெய்கள்
சிலிர்ப்ப * ஏங்கி இளைத்து நின்று *
எய்த்துக் கும்பிடு நட்டம் இட்டெழுந்து *

[3] நெஞ்சுள்

ஆடிப்பாடி இறைஞ்சி ** என்
அத்தனச்சன் அரங்கனுக்கு
அடியார்களாகி * அவனுக்கே[4]
பித்தராம் அவர் * பித்தர் அல்லர்கள் *
மற்றையார் முற்றும் பித்தரே 9

667 * அல்லி மாமலர் மங்கை நாதன் *
அரங்கன் மெய்யடியார்கள் தம் *
எல்லையில் அடிமைத் திறத்தினில் *
என்றும் மேவு மனத்தனாம் **
கொல்லிகாவலன் கூடல்நாயகன் *
கோழிக்கோன் குலசேகரன் *
சொல்லின் இன்தமிழ் மாலை வல்லவர் *
தொண்டர் தொண்டர்கள் ஆவரே 10

**அடிவரவு:** தேட்டு தோடு ஏறு தோய்த்த பொய் ஆதி காரினம்
மாலை மொய்த்து அல்லி மெய்

---

### குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
## பெருமாள் திருமொழி 3 - மெய்யில் வாழ்க்கையை
### (ஆழ்வார் அரங்கனுக்கு அடியாராய் உலகத்தாரோடு தாம் சேராமை)

668 * மெய்யில் வாழ்க்கையை * மெய்யெனக் கொள்ளும் * இவ்
வையம் தன்னொடும் * கூடுவதில்லை யான் **
ஐயனே! * அரங்கா! என்று அழைக்கின்றேன் *
மையல் கொண்டொழிந்தேன் * என்தன் மாலுக்கே 1

669 நூலினேர் இடையார் * திறத்தே நிற்கும் *
ஞாலம் தன்னொடும் * கூடுவதில்லை யான் **
ஆலியா அழையா * அரங்கா! என்று *
மாலெழுந்து ஒழிந்தேன் * என்தன் மாலுக்கே 2

670 மாரனார் * வரிவெஞ்சிலைக்கு ஆட்செய்யும் *
பாரினாரொடும் * கூடுவதில்லை யான் **
ஆரமார்வன் * அரங்கன் அனந்தன் * நல்
நாரணன் * நரகாந்தகன் பித்தனே 3

671 உண்டியே உடையே * உகந்தோடும் * இம்
மண்டலத்தொடும் * கூடுவதில்லை யான் **

---

[4] அவருக்கே

அண்டவாணன் * அரங்கன் வன்பேய் முலை *
உண்ட வாயன் தன் * உன்மத்தன் காண்மினே 4

672 தீதில் நன்னெறி நிற்க * அல்லாது செய் *
நீதியாரொடும் * கூடுவதில்லை யான் **
ஆதி ஆயன் * அரங்கன் அந்தாமரைப் *
பேதைமா * மணவாளன் தன் பித்தனே 5

673 எம்பரத்தர் * அல்லாரொடும் கூடலன் *
உம்பர் வாழ்வை * ஒன்றாகக் கருதிலன் **
தம்பிரான் அமரர்க்கு * அரங்க நகர் *
எம்பிரானுக்கு * எழுமையும் பித்தனே 6

674 எத்திறத்திலும் * யாரொடும் கூடும் * அச்
சித்தம் தன்னைத் * தவிர்த்தனன் செங்கண்மால் **
அத்தனே! * அரங்கா! என்று அழைக்கின்றேன் *
பித்தனாய் ஒழிந்தேன் * எம்பிரானுக்கே 7

675 பேயரே * எனக்கு யாவரும் * யானும் ஓர்
பேயனே * எவர்க்கும் இது பேசி என்! **
ஆயனே! * அரங்கா! என்று அழைக்கின்றேன் *
பேயனாய் ஒழிந்தேன் * எம்பிரானுக்கே 8

676 * அங்கை ஆழி * அரங்கன் அடியிணை *
தங்கு சிந்தைத் * தனிப் பெரும் பித்தனாய் **
கொங்கர்கோன் * குலசேகரன் சொன்ன சொல் *
இங்கு வல்லவர்க்கு * ஏதம் ஒன்றில்லையே 9

**அடிவரவு:** மெய் நூல் மாரனார் உண்டி தீதில் எம்பரத்தர்
எத்திறத்திலும் பேயரே அங்கை ஊன்

---

## குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
## பெருமாள் திருமொழி 4 - ஊனேறு
### (ஆழ்வார் திருவேங்கட மலையில் ஏதேனுமாக விரும்புதல்)

677 * ஊனேறு செல்வத்து * உடற்பிறவி யான் வேண்டேன் *
ஆனேறேழ் வென்றான் * அடிமைத் திறம் அல்லால் **
கூனேறு சங்கம் இடத்தான் தன் * வேங்கடத்து *
கோன் ஏரி வாழும் * குருகாய்ப் பிறப்பேனே 1

678 ஆனாத செல்வத்து * அரம்பையர்கள் தற்சூழ[5] *
வானாளும் செல்வமும் * மண்ணரசும் யான் வேண்டேன் *
தேனார் பூஞ்சோலைத் * திருவேங்கடச் சுனையில் *
மீனாய்ப் பிறக்கும் * விதி உடையேன்[6] ஆவேனே 2

679 பின்னிட்ட சடையானும் * பிரமனும் இந்திரனும் *
துன்னிட்டுப் புகல் அரிய * வைகுந்த நீள் வாசல் **
மின்வட்டச் சுடர் ஆழி * வேங்கடக் கோன் தானுமிழும் *
பொன் வட்டில் பிடித்துடனே * புகப் பெறுவேன்[7] ஆவேனே 3

680 ஒண்பவள வேலை * உலவு தண் பாற்கடலுள் *
கண் துயிலும் மாயோன் * கழலிணைகள் காண்பதற்கு **
பண் பகரும் வண்டினங்கள் * பண் பாடும் வேங்கடத்து *
செண்பகமாய் நிற்கும் * திருவுடையேன்[8] ஆவேனே 4

681 கம்பமத யானை * கழுத்தகத்தின் மேல் இருந்து *
இன்பமரும் செல்வமும் * இவ்வரசும் யான் வேண்டேன் **
எம்பெருமான் ஈசன் * எழில் வேங்கட மலை மேல் *
தம்பகமாய்[9] நிற்கும் * தவம் உடையேன்[10] ஆவேனே 5

682 மின்னனைய நுண்ணிடையார் * உருப்பசியும் மேனகையும் *
அன்னவர் தம் பாடலொடும் * ஆடல் அவை ஆதரியேன் **
தென்னவென வண்டினங்கள் * பண் பாடும் வேங்கடத்துள் *
அன்னனைய பொற்குவடாம் * அருந்தவத்தன்[11] ஆவேனே 6

683 வானாளும் மாமதி போல் * வெண்குடைக் கீழ் * மன்னவர் தம்
கோனாகி வீற்றிருந்து * கொண்டாடும் செல்வறியேன் **
தேனார் பூஞ்சோலைத் * திருவேங்கட மலை மேல் *
கானாறாய்ப் பாயும் * கருத்துடையேன்[12] ஆவேனே 7

684 பிறை ஏறு சடையானும் * பிரமனும் இந்திரனும் *
முறையாய பெருவேள்விக் * குறை முடிப்பான் மறையானான் **
வெறியார் தண்சோலைத் * திருவேங்கட மலை மேல் *
நெறியாய்க் கிடக்கும் * நிலை உடையேன்[13] ஆவேனே 8

---

[5] அரம்பையர் கடற்சூழ
[6] உடையென்
[7] பெறுவென்
[8] திருவுடையென்
[9] தம்பமாய்
[10] உடையென்
[11] அருந்தவத்தென்
[12] கருத்துடையென்
[13] உடையென்

685 * செடியாய வல்வினைகள் * தீர்க்கும் திருமாலே! *
நெடியானே! வேங்கடவா! * நின் கோயிலின் வாசல்[14] **
அடியாரும் வானவரும் * அரம்பையரும் கிடந்து இயங்கும் *
படியாய்க் கிடந்து * உன் பவளவாய் காண்பேனே 9

686 உம்பர் உலகாண்டு * ஒரு குடைக் கீழ் * உருப்பசி தன்
அம்பொற்கலை அல்குல் * பெற்றாலும் ஆதரியேன் **
செம்பவள வாயான் * திருவேங்கடம் என்னும் *
எம்பெருமான் பொன்மலை மேல் * ஏதேனும் ஆவேனே 10

687 * மன்னிய தண்சாரல் * வடவேங்கடத்தான் தன் *
பொன்னியலும் சேவடிகள் * காண்பான் புரிந்து இறைஞ்சி **
கொன்னவிலும் கூர்வேல் * குலசேகரன் சொன்ன *
பன்னிய நூல் தமிழ் வல்லார் * பாங்காய பத்தர்களே 11

**அடிவரவு:** ஊன் ஆனாத பின்னிட்ட ஒண் கம்பம் மின் வான் பிறை செடி
உம்பர் மன்னிய தரு

---

**குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த**

## பெருமாள் திருமொழி 5 - தருதுயரம்

**(விற்றுவக்கோட்டம்மான்[15] விஷயமாக: ஆழ்வார் தமது ஆகிஞ்சன்ய அநந்யகதித்வங்களைத் தெரிவித்தல்)**

688 * தருதுயரம் தடாயேல் * உன் சரண் அல்லால் சரண் இல்லை *
விரை குழுவும் மலர்ப்பொழில் சூழ் * விற்றுவக்கோட்டம்மானே! **
அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் * மற்றவள் தன்
அருள் நினைந்தே அழும் குழவி * அதுவே போன்றிருந்தேனே 1

689 கண்டார் இகழ்வனவே * காதலன் தான் செய்திடினும் *
கொண்டானை அல்லால் * அறியாக் குலமகள் போல் **
விண்தோய் மதிள் புடை சூழ் * விற்றுவக்கோட்டம்மா! * நீ
கொண்டாளாயாகிலும் * உன் குரைகழலே கூறுவனே 2

690 மீன் நோக்கும் நீள்வயல் சூழ் * விற்றுவக்கோட்டம்மா! * என்
பால் நோக்காயாகிலும் * உன் பற்றல்லால் பற்றிலேன் **
தான் நோக்காது எத்துயரம் * செய்திடினும் * தார்வேந்தன்
கோல் நோக்கி வாழும் * குடி போன்றிருந்தேனே 3

---

[14] வாயில்

[15] வித்துவக்கோடு என்றும் திருமொழி முழுவதும் பாடம்

691 வாளால் அறுத்துச் சுடினும் * மருத்துவன் பால் *
மாளாத காதல் * நோயாளன் போல் மாயத்தால் **
மீளாத் துயர் தரினும் * விற்றுவக்கோட்டம்மா! * நீ
ஆளா உனதருளே * பார்ப்பன் அடியேனே 4

692 வெங்கண் திண்களிறு அடர்த்தாய்! * விற்றுவக்கோட்டம்மானே! *
எங்குப் போய் உய்கேன்? * உன் இணையடியே அடையல் அல்லால் **
எங்கும் போய்க் கரை காணாது * எறிகடல் வாய் மீண்டேயும் *
வங்கத்தின் கூம்பேறும் * மாப்பறவை போன்றேனே 5

693 செந்தழலே வந்து * அழலைச் செய்திடினும் * செங்கமலம்
அந்தரம் சேர் * வெங்கதிரோற்கல்லால் அலராவால் **
வெந்துயர் வீட்டாவிடினும் * விற்றுவக்கோட்டம்மா! * உன்
அந்தமில் சீர்க்கல்லால் * அகம் குழைய மாட்டேனே 6

694 எத்தனையும் வான் மறந்த[16] காலத்தும் * பைங்கூழ்கள் *
மைத்தெழுந்த மாமுகிலே * பார்த்திருக்கும் மற்றவை போல் **
மெய்த்துயர் வீட்டாவிடினும் * விற்றுவக்கோட்டம்மா! * என்
சித்தம் மிக உன் பாலே * வைப்பன் அடியேனே 7

695 தொக்கிலங்குயாறெல்லாம் * பரந்தோடி * தொடுகடலே
புக்கன்றிப் புறம் நிற்க * மாட்டாத மற்றவை போல் **
மிக்கிலங்கு முகில்நிறத்தாய்! * விற்றுவக்கோட்டம்மா! * உன்
புக்கிலங்கு சீரல்லால் * புக்கிலன் காண் புண்ணியனே! 8

696 நின்னையே தான் வேண்டி * நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே * தான் வேண்டும் * செல்வம் போல் மாயத்தால் **
மின்னையே சேர் திகிரி * விற்றுவக்கோட்டம்மா![17] *
நின்னையே தான் வேண்டி * நிற்பன் அடியேனே 9

697 * விற்றுவக்கோட்டம்மா! * நீ வேண்டாயே ஆயிடினும் *
மற்றாரும் பற்றில்லேன் என்று * அவனைத் தாள் நயந்த **
கொற்றவேல் தானைக் * குலசேகரன் சொன்ன *
நற்றமிழ் பத்தும் வல்லார் * நண்ணார் நரகமே 10

**அடிவரவு:** தரு கண்டார் மீன் வாளால் வெங்கண் செந்தழல்
எத்தனை தொக்கு நின்னை விற்றுவக்கோடு ஏர்

---

**குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த**

[16] வறந்த
[17] விற்றுவக்கோட்டம்மானே

# பெருமாள் திருமொழி 6 - ஏர்மலர்
## (ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்கி உரைத்தல்)

698 * ஏர்மலர்ப் பூங்குழல் ஆயர் மாதர் *
எனைப் பலர் உள்ள இவ்வூரில் * உன்தன்
மார்வு தழுவுதற்கு ஆசையின்மை *
அறிந்தறிந்தே உன்தன் பொய்யைக் கேட்டு **
கூர்மழை போல் பனிக்கூதல் எய்திக் *
கூசி நடுங்கி யமுனை ஆற்றில் *
வார்மணல் குன்றில் புலர நின்றேன் *
வாசுதேவா! உன் வரவு பார்த்தே 1

699 கெண்டை ஒண்கண் மடவாள் ஒருத்தி *
கீழை அகத்துத் தயிர் கடையக்
கண்டு * ஒல்லை நானும் கடைவன் என்று *
கள்ள விழியை விழித்துப் புக்கு **
வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ *
வாள்முகம் வேர்ப்பச் செவ்வாய் துடிப்ப *
தண்தயிர் நீ கடைந்திட்ட வண்ணம் *
தாமோதரா! மெய்யறிவன் நானே 2

700 கருமலர்க் கூந்தல் ஒருத்தி தன்னைக் *
கடைக்கணித்து * ஆங்கே ஒருத்தி தன் பால்
மருவி மனம் வைத்து மற்றொருத்திக்கு
உரைத்து * ஒரு பேதைக்குப் பொய் குறித்து **
புரிகுழல் மங்கை ஒருத்தி தன்னைப்
புணர்தி * அவளுக்கும் மெய்யன் அல்லை *
மருதிறுத்தாய்! உன் வளர்த்தியூடே *
வளர்கின்றதால் உன்தன் மாயை தானே 3

701 தாய்முலைப் பாலில் அமுதிருக்கத் *
தவழ்ந்து தளர்நடை இட்டுச் சென்று *
பேய்முலை வாய் வைத்து நஞ்சை உண்டு *
பித்தன் என்றே பிறர் ஏச நின்றாய் **
ஆய்மிகு காதலோடு யான் இருப்ப *
யான் விட வந்த என் தூதியோடே *
நீ மிகு போகத்தை நன்குகந்தாய் *
அதுவும் உன் கோரம்புக்கேற்குமன்றே 4

702 மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு *
வீங்கிருள்வாய் என்தன் வீதியூடே *
பொன்னொத்தவாடை குக்கூடலிட்டுப் *

போகின்ற போது நான் கண்டு நின்றேன் **
கண்ணுற்றவளை நீ கண்ணாலிட்டுக் *
கைவிளிக்கின்றதும் கண்டே நின்றேன் *
என்னுக்கு அவளை விட்டு இங்கு வந்தாய்? *
இன்னம் அங்கே நட நம்பி! நீயே 5

703 மற்பொரு தோளுடை வாசுதேவா! *
வல்வினையேன் துயில் கொண்டவாறே *
இற்றை இரவிடையே மத்தென்னை *
இன்னணை மேலிட்டகன்று நீ போய் **
அற்றை இரவும் ஓர் பிற்றை நாளும் *
அரிவையரோடும் அணைந்து வந்தாய் *
எற்றுக்கு நீ என் மருங்கில் வந்தாய்? *
எம்பெருமான்! நீ எழுந்தருளே 6

704 பையரவின்னணைப் பள்ளியினாய்! *
பண்டையோம் அல்லோம் நாம் * நீ உகக்கும்
மையரி ஒண்கண்ணினாரும் அல்லோம் *
வைகி எம் சேரி வரவொழி நீ **
செய்ய உடையும் திருமுகமும் *
செங்கனி வாயும் குழலும் கண்டு *
பொய் ஒரு நாள் பட்டதே அமையும் *
புள்ளுவம் பேசாதே போகு நம்பீ! 7

705 என்னை வருகவெனக் குறித்திட்டு *
இனமலர் முல்லையின்பந்தர் நீழல் *
மன்னி அவளைப் புணரப் புக்கு *
மற்றென்னைக் கண்டு உழறா நெகிழ்ந்தாய் **
பொன்னிற ஆடையைக் கையில் தாங்கிப் *
பொய் அச்சம் காட்டி நீ போதியேலும் *
இன்னம் என் கையகத்து ஈங்கொரு நாள் *
வருதியேல் என் சினம் தீர்வன் நானே 8

706 மங்கல நல்வனமாலை மார்வில் இலங்க *
மயில் தழைப்பீலி சூடி *
பொங்கிளவாடை அரையில் சாத்திப் *
பூங்கொத்துக் காதில் புணரப்பெய்து **
கொங்கு நறுங்குழலார்களோடு *
குழைந்து குழல் இனிதூதி வந்தாய் *
எங்களுக்கே ஒரு நாள் வந்தூத *
உன் குழல் இன்னிசை போதராதே 9

707 * அல்லிமலர்த் திருமங்கை கேள்வன்
தன்னை * நயந்து இளவாய்ச்சிமார்கள் *
எல்லிப் பொழுதினில் ஏமத்தூடி *
எள்கி உரைத்த உரை அதனை **
கொல்லி நகர்க்கிறை கூடற்கோமான் *
குலசேகரன் இன்னிசையில் மேவி *
சொல்லிய இன்தமிழ் மாலை பத்தும் *
சொல்ல வல்லார்க்கு இல்லை துன்பம் தானே 10

**அடிவரவு:** ஏர் கெண்டை கரு தாய் மின் மற்பொரு பை என்னை
மங்கலம் அல்லி ஆலை

---

### குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த

## பெருமாள் திருமொழி 7 - ஆலைநீள் கரும்பு

### (கண்ணனது பால லீலைகளைக் காணப் பெறாத தேவகியின் புலம்பல்)

708 * ஆலைநீள் கரும்பன்னவன் தாலோ *
அம்புயத் தடங்கண்ணினன் தாலோ *
வேலைநீர் நிறத்தன்னவன் தாலோ *
வேழப் போதக மன்னவன் தாலோ **
ஏலவார்குழல் என் மகன் தாலோ *
என்றென்று உன்னை என் வாயிடை நிறைய *
தாலொலித்திடும் திருவினை இல்லாத் *
தாயரில் கடையாயின தாயே 1

709 வடிக்கொள் அஞ்சனம் எழுது செம்மலர்க்கண் *
மருவி மேலினிதொன்றினை நோக்கி *
முடக்கிச் சேவடி மலர்ச் சிறுகருந்தாள் *
பொலியும் நீர்முகிற் குழவியே போல **
அடக்கியாரச் செஞ்சிறுவிரல் அனைத்தும் *
அங்கையோடு அணைந்து ஆனையிற்கிடந்த *
கிடக்கை கண்டிடப் பெற்றிலன் அந்தோ! *
கேசவா! கெடுவேன் கெடுவேனே 2

710 முந்தை நன்முறையன் புடை மகளிர் *
முறை முறை தந்தம் குறங்கிடை இருத்தி *
எந்தையே! என் குலப் பெருஞ்சுடரே! *
எழுமுகில் கணத்தெழில் கவரேறே! **
உந்தையாவன் என்றுரைப்ப நின் செங்கேழ்
விரலினும் * கடைக்கண்ணினும் காட்ட *
நந்தன் பெற்றனன் நல்வினை இல்லா *

நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே 3

711 களிநிலா எழில் மதி புரை முகமும் *
கண்ணனே! திண்கை மார்வும் திண்தோளும் *
தளிர்மலர்க் கருங்குழல் பிறையதுவும் *
தடங்கொள் தாமரைக் கண்களும் பொலிந்த **
இளமை இன்பத்தை இன்று என்தன் கண்ணால் *
பருகுவேற்கு இவள் தாய் என நினைந்த *
அளவில் பிள்ளைமை இன்பத்தை இழந்த *
பாவியேன் எனதாவி நில்லாதே 4

712 மருவும் நின் திருநெற்றியில் சுட்டி
அசை தர * மணிவாயிடை முத்தம்
தருதலும் * உன்தன் தாதையைப் போலும்
வடிவு கண்டு கொண்டு * உள்ளம் உள்குளிர **
விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து *
வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும் *
திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் * எல்லாம்
தெய்வ நங்கை யசோதை பெற்றாளே 5

713 தண்ணந்தாமரைக் கண்ணனே! கண்ணா! *
தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர் நடையால் *
மண்ணில் செம்பொடியாடி வந்து * என்தன்
மார்வில் மன்னிடப் பெற்றிலேன் அந்தோ! **
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும் *
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில் *
உண்ணப் பெற்றிலேன் ஓ! கொடுவினையேன் *
என்னை என் செய்யப் பெற்றது எம்மோயே! 6

714 குழகனே! என்தன் கோமளப் பிள்ளாய்! *
கோவிந்தா! என் குடங்கையில் மன்னி *
ஒழுகு பேரெழில் இளஞ்சிறு தளிர் போல் *
ஒரு கையால் ஒரு முலைமுகம் நெருடா **
மழலை மென்னகை இடையிடை அருளா *
வாயிலே முலை இருக்க என் முகத்தே *
எழில்கொள் நின் திருக்கண்ணிணை நோக்கம்
தன்னையும் * இழந்தேன் இழந்தேனே 7

715 முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும் *
முகிழ் இளஞ்சிறுத் தாமரைக் கையும் *
எழில்கொள் தாம்பு கொண்டடிப்பதற்கு எள்கு
நிலையும் * வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும் **
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும் *

அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும் *
தொழுகையும் இவை கண்ட அசோதை *
தொல்லை இன்பத்திறுதி கண்டாளே 8

716 குன்றினால் குடை கவித்ததும் கோலக்
குரவை கோத்ததும் * குடமாட்டும் *
கன்றினால் விளவெறிந்ததும் * காலால்
காளியன் தலை மிதித்ததும் முதலா **
வென்றிசேர் பிள்ளை நல்விளையாட்டம்
அனைத்திலும் * அங்கென் உள்ளம் உள்குளிர *
ஒன்றும் கண்டிடப் பெற்றிலேன் அடியேன் *
காணுமாறு இனி உண்டெனில் அருளே 9

717 வஞ்சமேவிய நெஞ்சுடைப் பேய்ச்சி *
வரண்டுநார் நரம்பெழக் கரிந்துக்க *
நஞ்சமார்தரு சுழிமுலை அந்தோ! *
சுவைத்து நீ அருள் செய்து வளர்ந்தாய் **
கஞ்சன் நாள்கவர் கருமுகில் எந்தாய்! *
கடைப்பட்டேன் வெறிதே[18] முலை சுமந்து *
தஞ்சமேல் ஒன்றிலேன் உய்ந்திருந்தேன் *
தக்கதே நல்ல தாயைப் பெற்றாயே 10

718 * மல்லை மாநகர்க்கு இறையவன் தன்னை *
வான்செலுத்தி வந்தீங்கணை[19] மாயத்து *
எல்லையில் பிள்ளை செய்வன காணாத் *
தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல் **
கொல்லி காவலன் மாலடி முடிமேல் *
கோலமாம் குலசேகரன் சொன்ன *
நல்லிசைத் தமிழ் மாலை வல்லார்கள் *
நண்ணுவார் ஒல்லை நாரணன் உலகே 11

**அடிவரவு:** ஆலை வடி முந்தை களி மருவு தண்ணம் குழகன்
முழுதும் குன்றினால் வஞ்சம் மல்லை மன்னு

---

### குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த

## பெருமாள் திருமொழி 8 - மன்னுபுகழ்

### (சக்ரவர்த்தித் திருமகனைக் கௌசலையார் தாலாட்டும் பாசுரம்)

[18] வறிதே
[19] வந்தீங்ஙன

719 * மன்னுபுகழ்க் கௌசலை தன் *
மணிவயிறு வாய்த்தவனே! *
தென்னிலங்கைக் கோன் முடிகள் *
சிந்துவித்தாய்! செம்பொன் சேர் **
கன்னிநன்மா மதிள் புடை சூழ் *
கணபுரத்தென் கருமணியே! *
என்னுடைய இன்னமுதே! *
இராகவனே! தாலேலோ 1

720 புண்டரிக மலரதன் மேல் *
புவனி எல்லாம் படைத்தவனே! *
திண்திறலாள் தாடகை தன் *
உரமுருவச் சிலை வளைத்தாய்! **
கண்டவர் தம் மனம் வழங்கும் *
கணபுரத்தென் கருமணியே! *
எண்திசையும் ஆளுடையாய்! *
இராகவனே! தாலேலோ 2

721 கொங்குமலி கருங்குழலாள் *
கௌசலை தன் குலமதலாய்! *
தங்கு பெரும் புகழ்ச் சனகன் *
திருமருகா! தாசரதீ! **
கங்கையிலும் தீர்த்தமலி *
கணபுரத்தென் கருமணியே! *
எங்கள் குலத்து இன்னமுதே! *
இராகவனே! தாலேலோ 3

722 தாமரை மேல் அயன் அவனைப்
படைத்தவனே! * தயரதன் தன்
மாமதலாய்! * மைதிலி தன்
மணவாளா! ** வண்டினங்கள்
காமரங்கள் இசை பாடும் *
கணபுரத்தென் கருமணியே! *
ஏமருவும் சிலை[20] வலவா! *
இராகவனே! தாலேலோ 4

723 பாராளும் படர் செல்வம் *
பரத நம்பிக்கே அருளி *
ஆராவன்பு இளையவனோடு *
அருங்கானம் அடைந்தவனே! **
சீராளும் வரை மார்பா! *

[20] ஏமருவெம்சிலை

திருக்கண்ணபுரத்தரசே! *
தாராளும்[21] நீண்முடி * என்
தாசரதீ! தாலேலோ 5

724 சுற்றம் எல்லாம் பின் தொடரத் *
தொல்கானம் அடைந்தவனே! *
அற்றவர்கட்கு அருமருந்தே! *
அயோத்தி நகர்க்கு அதிபதியே! **
கற்றவர்கள் தாம் வாழும் *
கணபுரத்தென் கருமணியே!
சிற்றவை தன் சொல் கொண்ட *
சீராமா! தாலேலோ 6

725 ஆலினிலைப் பாலகனாய் *
அன்றுலகம் உண்டவனே! *
வாலியைக் கொன்று அரசு * இளைய
வானரத்துக்கு அளித்தவனே! **
காலின்மணி கரை அலைக்கும் *
கணபுரத்தென் கருமணியே! *
ஆலிநகர்க்கு அதிபதியே! *
அயோத்திமனே! தாலேலோ 7

726 * மலை அதனால் அணை கட்டி *
மதிள் இலங்கை அழித்தவனே! *
அலைகடலைக் கடைந்து * அமரர்க்கு
அமுதருளிச் செய்தவனே! **
கலைவலவர் தாம் வாழும் *
கணபுரத்தென் கருமணியே! *
சிலைவலவா! சேவகனே! *
சீராமா! தாலேலோ 8

727 தளை அவிழும் நறுங்குஞ்சித் *
தயரதன் தன் குலமதலாய்! *
வளைய ஒரு சிலை அதனால் *
மதிள் இலங்கை அழித்தவனே! **
களைகழுநீர் மருங்கலரும் *
கணபுரத்தென் கருமணியே! *
இளையவர்கட்கு அருளுடையாய்! *
இராகவனே! தாலேலோ 9

---

[21] தாராரும்

728 * தேவரையும் அசுரரையும் *
திசைகளையும் படைத்தவனே! *
யாவரும் வந்து அடிவணங்க *
அரங்கநகர்த் துயின்றவனே! **
காவிரி நல்நதி பாயும் *
கணபுரத்தென் கருமணியே! *
ஏவரிவெஞ்சிலை வலவா! *
இராகவனே! தாலேலோ 10

729 * கன்னிநன்மாமதிள் புடை சூழ் *
கணபுரத்தென் காகுத்தன்
தன்னடி மேல் * தாலேலோ
என்றுரைத்த * தமிழ் மாலை **
கொல்நவிலும் வேல்வலவன் *
குடைக் குலசேகரன் சொன்ன *
பன்னிய நூல் பத்தும் வல்லார் *
பாங்காய பத்தர்களே 11

**அடிவரவு:** மன்னு புண்டரீகம் கொங்கு தாமரை பார் சுற்றம்
ஆலின் மலை தளை தேவரை கன்னி வந்தாள்

---

### குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
## பெருமாள் திருமொழி 9 - வன்தாளினிணை
### (தனயன் வனம் புகத் தசரதன் புலம்புதல்)

730 * வன்தாளினிணை வணங்கி வளநகரம்
தொழுதேத்த * மன்னனாவான்
நின்றாயை * அரியணை மேல் இருந்தாயை *
நெடுங்கானம் படரப் போகு
என்றாள் ** எம் இராமாவோ! * உனைப் பயந்த
கைகேசி தன் சொற்கேட்டு *
நன்றாக நானிலத்தை ஆள்வித்தேன் *
நன்மகனே! உன்னை நானே 1

731 வெவ்வாயேன் வெவ்வுரை கேட்டு * இருநிலத்தை
வேண்டாதே விரைந்து * வென்றி
மைவாய களிறொழிந்து தேரொழிந்து
மாவொழிந்து * வனமே மேவி **
நெய்வாய வேல்நெடுங்கண் * நேரிழையும்
இளங்கோவும் பின்பு போக *

எவ்வாறு நடந்தனை? எம் இராமாவோ! *
எம்பெருமான்! என் செய்கேனே! 2

732 கொல்லணைவேல் வரிநெடுங்கண் * கௌசலை தன்
குலமதலாய்! குனிவில்லேந்தும் *
மல்லணைந்த வரைத்தோளா! * வல்வினையேன்
மனமுருக்கும் வகையே கற்றாய் **
மெல்லணை மேல் முன் துயின்றாய் இன்றினிப்போய் *
வியன்கான மரத்தின் நீழல் *
கல்லணை மேல் கண் துயிலக் கற்றனையோ? *
காகுத்தா! கரிய கோவே! 3

733 வா போகு வா இன்னம் வந்து ஒருகால்
கண்டு போ * மலராள் கூந்தல் *
வேய் போலும் எழில் தோளி தன் பொருட்டா *
விடையோன் தன் வில்லைச் செற்றாய் **
மாபோகு நெடுங்கானம் வல்வினையேன் *
மனமுருக்கும் மகனே! * இன்று
நீ போக என் நெஞ்சம் * இருபிளவாய்ப்
போகாதே நிற்குமாறே 4

734 பொருந்தார் கைவேல்நுதி போல் பரல் பாய *
மெல்லடிக்கள்[22] குருதி சோர *
விரும்பாத கான் விரும்பி வெயில் உறைப்ப *
வெம்பசி நோய் கூர ** இன்று
பெரும் பாவியேன் மகனே! போகின்றாய் *
கேகயர் கோன் மகளாய்ப் பெற்ற *
அரும்பாவி சொற்கேட்ட அருவினையேன் *
என் செய்கேன்? அந்தோ! யானே 5

735 அம்மா என்று உகந்தழைக்கும் * ஆர்வச் சொல்
கேளாதே அணிசேர் மார்வம் *
என் மார்வத்திடை அழுந்தத் * தழுவாதே
முழுசாதே[23] மோவாதுச்சி **
கைம்மாவின் நடையன்ன மென்னடையும் *
கமலம் போல் முகமும் காணாது *
எம்மானை என் மகனை இழந்திட்ட *
இழிதகையேன் இருக்கின்றேனே 6

736 பூமருவு நறுஞ்குஞ்சி புன்சடையாய்

[22] மெல்லடிக்கண்
[23] முழுவாதே

புனைந்து * பூந்துகில் சேரல்குல் *
காமரெழில் விழலுடுத்துக் * கலனணியாது
அங்கங்கள் அழகு மாறி **
ஏமருதோள் என் புதல்வன் * யான் இன்று
செலத் தக்க வனம் தான் சேர்தல் *
தூமறையீர்! இது தகவோ? * சுமந்திரனே!
வசிட்டனே! சொல்லீர் நீரே 7

737 பொன்பெற்றார் எழில் வேதப் புதல்வனையும் *
தம்பியையும் பூவை போலும் *
மின்பற்றா நுண்மருங்குல் * மெல்லியல் என்
மருகியையும் வனத்தில் போக்கி **
நின் பற்றா நின் மகன் மேல் பழி விளைத்திட்டு *
என்னையும் நீள்வானில் போக்க *
என் பெற்றாய்? கைகேசீ! * இருநிலத்தில்
இனிதாக இருக்கின்றாயே 8

738 முன்னொரு நாள் மழுவாளி சிலை வாங்கி *
அவன் தவத்தை முற்றும் செற்றாய் *
உன்னையும் உன் அருமையையும் உன் மோயின்
வருத்தமும் * ஒன்றாகக் கொள்ளாது **
என்னையும் என் மெய்யுரையும் மெய்யாகக்
கொண்டு * வனம் புக்க எந்தாய்! *
நின்னையே மகனாகப் பெறப் பெறுவேன் *
ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே! 9

739 தேனகு மாமலர்க் கூந்தல் * கௌசலையும்
சுமித்திரையும் சிந்தை நோவ *
கூனுருவின் கொடுந்தொழுத்தை சொற்கேட்ட *
கொடியவள் தன் சொல் கொண்டு ** இன்று
கானகமே மிக விரும்பி * நீ துறந்த
வளநகரைத் துறந்து * நானும்
வானகமே மிக விரும்பிப் போகின்றேன் *
மனுகுலத்தார் தங்கள் கோவே! 10

740 * ஏரார்ந்த கருநெடுமால் இராமனாய் *
வனம் புக்க அதனுக்கு ஆற்றா *
தாரார்ந்த தடவரைத்தோள் தயரதன்
தான் புலம்பிய * அப்புலம்பல் தன்னை **
கூரார்ந்த வேல்வலவன் கோழியர் கோன் *
குடைக் குலசேகரன் சொற்செய்த *
சீரார்ந்த தமிழ் மாலை இவை வல்லார் *

தீநெறிக்கண் செல்லார் தாமே 11

**அடிவரவு:** வன்தாள் வெவ்வாயேன் கொல்லணை வாபோகு பொருந்தார்
அம்மா பூ பொன் முன் தேன் ஏரார்ந்த அங்கண்

---

### குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
## பெருமாள் திருமொழி 10 - அங்கணெடு மதிள்
### (ஸ்ரீராமாயண கதைச் சுருக்கம் - திருச்சித்ரகூடம்)

741 * அங்கணெடு மதிள் புடை சூழ் அயோத்தி என்னும் *
அணி நகரத்து உலகனைத்தும் விளக்கும் சோதி *
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி *
விண் முழுதும் உயக் கொண்ட வீரன் தன்னை **
செங்கணெடுங் கருமுகிலை இராமன் தன்னைத் *
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
எங்கள் தனி முதல்வனை எம்பெருமான் தன்னை *
என்று கொலோ! கண் குளிரக் காணும் நாளே 1

742 வந்தெதிர்ந்த தாடகை தன் உரத்தைக் கீறி *
வரு குருதி பொழி தர வன்கணை ஒன்றேவி *
மந்திரங்கொள் மறை முனிவன் வேள்வி காத்து *
வல்லரக்கர் உயிருண்ட மைந்தன் காண்மின் **
செந்தளிர்வாய் மலர் நகை சேர் செழுந்தண் சோலைத் *
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த *
அணிமணி ஆசனத்திருந்த அம்மான் தானே 2

743 செவ்வரி நற்கருநெடுங்கண் சீதைக்காகிச் *
சின விடையோன் சிலை இறுத்து மழுவாள் ஏந்தி *
வெவ்வரி நற்சிலை வாங்கி வென்றி கொண்டு *
வேல்வேந்தர் பகை தடிந்த வீரன் தன்னை **
தெவ்வரஞ்சு நெடும் புரிசை உயர்ந்த பாங்கர்த் *
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
எவ்வரி வெஞ்சிலைத் தடக்கை இராமன் தன்னை *
இறைஞ்சுவார் இணையடியே இறைஞ்சினேனே 3

744 தொத்தலர் பூஞ்சுரிகுழல் கைகேசி சொல்லால் *
தொன்னகரம் துறந்து துறைக் கங்கை தன்னை *
பத்தியுடைக் குகன் கடத்த வனம் போய்ப் புக்குப் *
பரதனுக்குப் பாதுகமும் அரசும் ஈந்து **
சித்திரகூடத்து இருந்தான் தன்னை * இன்று

தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
எத்தனையும் கண்குளிரக் காணப் பெற்ற *
இருநிலத்தார்க்கு இமையவர் நேரொவ்வார் தாமே 4

745 வலி வணக்கு வரை நெடுந்தோள் விராதைக் கொன்று[24] *
வண்தமிழ் மாமுனி கொடுத்த வரிவில் வாங்கி *
கலைவணக்கு நோக்கரக்கி மூக்கை நீக்கிக் *
கரனோடு தூடணன் தன் உயிரை வாங்கி **
சிலை வணக்கி மான் மரிய எய்தான் தன்னைத் *
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
தலை வணக்கிக் கை கூப்பி ஏத்த வல்லார் *
திரிதலால் தவமுடைத்துத்[25] தரணி தானே 5

746 தனமருவு வைதேகி பிரியல் உற்றுத் *
தளர்வெய்திச் சடாயுவை வைகுந்தத்து ஏற்றி *
வனமருவு கவி அரசன் காதல் கொண்டு *
வாலியைக் கொன்று இலங்கை நகர் அரக்கர் கோமான் **
சினம் அடங்க மாருதியால் சுடுவித்தானைத் *
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
இனிதமர்ந்த அம்மானை இராமன் தன்னை *
ஏத்துவார் இணையடியே ஏத்தினேனே 6

747 குரை கடலை அடலம்பால் மறுக எய்து *
குலை கட்டி மறு கரையை அதனால் ஏறி *
எரி நெடுவேல் அரக்கரொடும் இலங்கை வேந்தன் *
இன்னுயிர் கொண்டு அவன் தம்பிக்கு அரசும் ஈந்து **
திருமகளோடு இனிதமர்ந்த செல்வன் தன்னைத் *
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
அரசமர்ந்தான் அடி சூடும் அரசை அல்லால் *
அரசாக எண்ணேன் மற்றரசு தானே 7

748 அம்பொனெடு மணிமாட அயோத்தி எய்தி *
அரசெய்தி அகத்தியன் வாய்த்தான் முன் கொன்றான்
தன் * பெருந்தொல் கதை கேட்டு மிதிலைச் செல்வி *
உலகுய்யத் திருவயிறு வாய்த்த மக்கள் **
செம்பவளத் திரள் வாய்த் தன் சரிதை கேட்டான் *
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
எம்பெருமான் தன் சரிதை செவியால் கண்ணால்
பருகுவோம் * இன்னமுதம் மதியோம் அன்றே[26] 8

---

[24] விராதற்கொன்று
[25] தவமுடைத்தித்
[26] இன்றே / ஒன்றே

749 செறிதவச் சம்புகன் தன்னைச் சென்று கொன்று *
செழுமறையோன் உயிர் மீட்டுத் தவத்தோன் ஈந்த *
நிறைமணிப் பூண் அணியும் கொண்டு இலவணன் தன்னைத் *
தம்பியால் வான் ஏற்றி முனிவன் வேண்ட **
திறல் விளங்கும் இலக்குமனைப் பிரிந்தான் தன்னைத் *
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
உறைவானை மறவாத உள்ளம் தன்னை
உடையோம் * மற்றுறு துயரம் அடையோம் அன்றே[27] 9

750 * அன்று சராசரங்களை வைகுந்தத்து ஏற்றி *
அடல் அரவப் பகை ஏறி அசுரர் தம்மை
வென்று * இலங்கு மணி நெடுந்தோள் நான்கும் தோன்ற *
விண் முழுதும் எதிர் வரத் தன் தாமம் மேவி **
சென்று இனிது வீற்றிருந்த அம்மான் தன்னைத் *
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
என்றும் நின்றான் அவன் இவன் என்று ஏத்தி * நாளும்
இறைஞ்சுமினோ எப்பொழுதும் தொண்டீர்! நீரே 10

751 * தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
திறல் விளங்கு மாருதியோடு அமர்ந்தான் தன்னை *
எல்லையில் சீர்த் தயரதன் தன் மகனாய்த் தோன்றிற்று
அது முதலாத் * தன் உலகம் புக்கது ஈறா **
கொல்லியலும் படைத்தானைக் கொற்ற வொள் வாள் *
கோழியர் கோன் குடைக் குலசேகரன் சொற் செய்த *
நல்லியலின் தமிழ் மாலை பத்தும் வல்லார் *
நலம் திகழ் நாரணன் அடிக் கீழ் நண்ணுவாரே 11

**அடிவரவு:** அங்கண் வந்து செவ்வரி தொத்து வலி தனம் குரை
அம்பொன் செறி அன்று தில்லை பூநிலாய

---

**குலசேகரப் பெருமாள் திருவடிகளே சரணம்**

[27] இன்றே